# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.B.A.** DEGREE EXAMINATION – **BUSINESS ADMINISTRATION**

FIRST SEMESTER – **NOVEMBER 2019**

**UTL 1102 – TAMIL - I**

Date: 07-11-2019 Dept. No. Max. : 100 Marks
Time: 09:00-12:00

**பகுதி - அ** **(10 x 2 = 20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. ‘வழி வழி வந்த உன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற் றெழுக!’- விளக்குக.
02. ‘வம்பு செய்யும் குணமிருந்தால் விட்டிடவேணும் - அறிவு
வளர்ச்சியிலே வான்முகட்டைத் தொட்டிட வேணும்!’ - பொருள் தருக.
03. பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு பூமி என்ன சொன்னது?
04. ‘கண்களைத் தோண்டிய பிறகு புருவத்தில் பூசுவதற்கு
மை சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள் இந்த மனிதர்கள்’ - விளக்கம் தருக.
05. கல்லாதவன் கற்ற கவி எதைப் போன்றது என ஔவையார் கூறுகிறார்?
06. மாயூரம் வேதநாயகர் எழுதிய புதினங்கள் யாவை?
07. பொருள் தருக : i) நிரை, நிறை ii) அலகு, அழகு
08. ஒற்று மிகும், மிகா இடங்களை எழுதுக.
i) நிலா + சோறு = ii) ஏவு + கணை = iii) நாடு + பற்று = iv) வாழ்க + தமிழ் =
09. தொடர்ப்பிழை நீக்குக.
i) கனவிலோர் காரிகை தோன்றினாள் ii) வெல்டன் எல்லாம் கரெக்ட் ஆன்சர்ஸ்
10. பிழை நீக்கி எழுதுக : i) உடமை ii) சிகப்பு iii) புட்டு iv) வெங்கலம்

**பகுதி - ஆ** **(5 x 7 = 35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. தமிழின் சிறப்புகளைத் தமிழ்த்தெய்வ வணக்கப்பாடல் எங்ஙனம் உணர்த்துகிறது?
12. ‘வீட்டுக்கொரு மரம்’ கவிதையின் மூலம் அப்துல்ரகுமான் வெளிப்படுத்தும் கருத்துகள் யாவை?
13. இளம்பருவத்து நட்பை அசைபோடும் ‘எஞ்சோட்டுப் பெண்’கவிதையினை ஆய்க.
14. பிள்ளைச் சிறு விண்ணப்பத்தின் வாயிலாக இராமலிங்க அடிகளார் கூறும் அறக்கருத்துகளை எழுதுக.
15. உம்பாடப்பகுதியில் அமைந்த திருமந்திரப் பாடல்கள் மூலம் திருமூலர் அறிவுறுத்தும் கருத்துகளை எழுதுக.
16. ஜெயகாந்தனின் ‘பொம்மை’ சிறுகதை குறித்து விளக்குக.
17. மு.மேத்தா, வைரமுத்து - குறிப்பு வரைக.

**பகுதி - இ** **(3 x 15 = 45 மதிப்பெண்கள்)**

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க.**

18. பாரதியாரின் ‘பாரததேசம்’ பாடல்வழி உணர்த்தப்பெறும் கருத்துகளை விளக்குக.
**( அல்லது )**
முத்தொள்ளாயிரத்தில் அமைந்த சேர, சோழ, பாண்டியர்களின் சிறப்புகளை எடுத்துரைக்க.

19. இராஜம் கிருஷ்ணனின் ‘தனிமை’ சிறுகதை வெளிப்படுத்தும் கருத்துகளை விவரிக்க.
**( அல்லது )**
ஏழ்மையின் சித்திரிப்பாக அமைந்த மு.வ.வின் ‘குறட்டை ஒலி’ சிறுகதை குறித்து ஆய்க.

20. மேனாட்டுத் தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி குறித்துக் கட்டுரைக்க.
**( அல்லது )**
சிற்றிலக்கியங்களைப் பற்றித் தொகுத்துரைக்க.

@@@@@@